தேதி: 29-11-2021

O.S. No. 389/14

வ.சா.1. திரு.தண்டபாணி

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை:

கருப்பணவிருதுள்ளார் என்பவர் 20 ஆண்டுகளுக்கு முன்பு காலமானார். 04.11.1969 ல் கருப்பணவிருதுள்ளார் காலமானார் தற்போது வழக்கிற்காக 20 ஆண்டுகள் என்று கூறுகிறீர்கள் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. கருப்பணவிருதுள்ளாரின் சொத்தில் நான் பாகம் கோருகிறேன். அதற்காக கருப்பணவிருதுள்ளாரின் இறப்பு சான்று, வாரிசு சான்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி, தாக்கல் செய்யவில்லை. என் தாயாரின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் நான் எந்த வாரிசு சான்றும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தின் வடபுறம் உள்ள சொத்து 46 செண்ட் முத்துவிருதுள்ளாருக்கு உயில்படி ஒதுக்கப்பட்டது. அதுபோக மீதம் 46 செண்ட் பொதுவில் உள்ளது. 3ம் வாதி முத்துவிருள்ளாரின் மகள். 3ம் வாதிக்கு அவருடைய தகப்பானரின் 46 செண்ட் சொத்துபோக மீதம் மேலும் 1 ஏக்கர் சொத்து வடபுறத்தில் அமைந்துள்ளது என்றால் சரி. வழக்கு சொத்தை ஒட்டி 46 செண்ட் நிலம் இருந்ததால் வழக்கு சொத்திற்கும் சேர்த்து கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரி. அந்த பட்டாவை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, 46 செண்ட் முத்துவிருள்ளாருக்கு தனிபட்டா உள்ளது. நீங்களும் 6ம் பிரதிவாதியும் அக்காவையும், தங்கையும் திருமணம் செய்துள்ளீர்கள் என்றால் சரி. என் மாமனாருக்கு 3 மகள்கள். அதனால் உங்கள் தாய்மாமாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து நீங்களே அடைந்து அனுபவிக்கிறீர்கள் என்றால் சரியல்ல, என் தாயாருக்கு எந்த சொத்தும் ஒதுக்கவில்லை. 1968 உயில்படி உங்கள் தாயாருக்கு F ஜாபிதா சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. உங்கள் மாமனாருக்கு 1 ஏக்கர் நிலமும், 10 குழி வயலும் கொடுத்தார்கள் என்றால் சரி, என் தாயாருக்கு கொடுக்கவில்லை. உங்கள் தாயாருக்கு 1 ஏக்கர் நிலமும், 10 குழி வயலும் கொடுத்தார்கள் என்றால் இல்லை. உங்கள் தாயார் எப்போது காலமானார் என்றால் 30 ஆண்டுகள் ஆகிறது. கருப்பணவிருதுள்ளாரின் வாரிசுகள் 20 ஆண்டுக்களுக்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றால் சரி. கருப்பணவிருதுள்ளாரின் மகன்

காளிப்பவிருதுள்ளாருக்கு மட்டுமே ஆண் வாரிசு உள்ளார்கள் என்றால் சரி. 1968 உயிலில் வீட்டை ஆண்வாரிசுகளுக்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக அதில் பாகம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 92 செண்ட்டில் 46 செண்ட் நிலத்திற்கு கூட்டுப்பட்டா உள்ளது மீதி நிலத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்பது தெரியாது. வழக்கிற்காக 46 செண்ட் பற்றி தெரியாது என்று சொல்கிறீர்கள் 92 செண்ட்டிற்கு கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரியல்ல. ஆறுமுகவிருதுள்ளாருக்கு 1 மனைவியும், 2 மகன்களும், ஒரு மகளும் வாரிசு என்றால் சாி. ஆறுமுகவிருதுள்ளாரின் 1 மகனை மட்டுமே இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. 1,2 வாதிகளிடம் இந்த வழக்கு விபரங்களை தெரிவிக்காமல் பட்டா மாறுதலுக்கு மனு என்று கேட்டு பிராதில் கையொப்பம் வாங்கி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தில் 3 வீடும், மாட்டுக்கொட்டகையும் உள்ளது என்றால் நாங்கள் இருந்த வீடு இடிந்துவிட்டது மாட்டுக்கொட்டகையில் காளியம்மாள் குடியிருக்கிறார். 3 ம் பிரதிவாதியும் தென்புறமாக தனியாக ஓட்டு வீட்டில் குடியிருக்கிறார். 1972 முதல் 1 ம் பிரதிவாதி இவ்வழக்கு சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார் என்றால் அவர் பஞ்சாயத்தில் வேலை பார்த்ததால் அவரிடம் பணத்தை கொடுத்துவிடுவோம், அவர் மொத்தமாக வரி செலுத்திவிட்டார். இதனால் நீங்கள் உங்கள் பெயரில் வரி செலுத்துகிறீர்கள் என்று கேட்டீர்கள் என்றால் பஞ்சாயத்தில் இருந்ததால் கட்டிவிடுவார் என்று கொடுத்தோம். 1969 முதல் தற்போது வரை 1 முதல் 3 பிரதிவாதி வழக்கு சொத்தை அனுபவிக்கிறார்கள் எனவே தான் அவர்கள் பெயரில் வரி செலுத்துவதற்கு ஆட்சபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் அனுப்பிய அறிவிப்பிற்கு 1, 2 பிரதிவாதி பதில் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. காளியப்பவிருதுள்ளாரின் வாரிசுகள் அனைவருக்கும் சொத்துக்கள் பங்கிட்டு கொடுத்ததால் அவர்கள் யாரும் பாகம் கேட்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையான வாரிசுகளை குறிப்பிடாமல் இவ்வழக்கை தாக்கல் செய்தும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை 1969 ஆண்டு முதல் அனுபவித்து வரும்நிலையில் உங்களுக்கு வழக்கு சொத்தில் பங்கு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் , 4 ம் வாதி, 5,6 ம் பிரதிவாதி ஆகியோர் கருப்பாயி அம்மாள், பச்சைகண்ணுவிருதுள்ளார் ஆகியோரிடமிருந்து சொத்தை பாகம் வாங்கியுள்ளீர்கள் என்றால் பச்சைகண்ணுவிருதுள்ளாரின் 3 மகள்கள் தான் 10 குழி வயல், 1 ஏக்கர்

தோட்டத்தை பிரித்து கொண்டார்கள். அவர்கள் மூவரும் தான் 4 ம் வாதி மற்றும் 4,5 பிரதிவாதிகள் என்றால் சரி. கருப்பாயி அம்மாளுக்கும் வா.சா.1 ன்படி பாகம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, கொடுக்கவில்லை. கருப்பணவிருதுள்ளாரின் வாரிசுகள் யாரும் பாகம் கேட்காமல் அவரின் வாரிசுகளின் வாரிசுகாளன நீங்கள் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் கருப்பணவிருதுள்ளாரின் ஆண் வாரிசுகளின் ஆண் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனவேதான் கருப்பணவிருதுள்ளாரின் வாரிசுகள் யாரும் பாகம் கேட்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் 46 செண்ட் -ஐ பாகம் கேட்பதால் 1969 ம் வருட உயில்படி அனைத்து சொத்துக்களும் பாகம் செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நீங்கள் மனபிணக்கு காரணமாகவே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கை தவறாக மதிப்பிட்டு, தவறான விகிதசாரத்திற்கு பாகம் கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனவேதான் அரசு வழிகாட்டி மதிப்பு படி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளால் தனித்து அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்களை இடையூறு செய்ததால் உங்கள் மீது காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**ஒம். K.ஹரிஹரன்**
**முதன்மை சார்பு நீதிபதி,**
**பழனி.**